திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி வார்டு 19 தண்டரை பெருமாள் கோவில் குளத்தில் 49 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் உடல் பயிற்சி நடப்பாதை மற்றும் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார் உடன் ஆவடி மேயர் உதயகுமார் மாநகர ஆணையர் சரண்யா மண்டல குழு தலைவர் அம்மு விஜயன் மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் பகுதி கழகச் செயலாளர்கள் பொன் விஜயன், ஜி.நாராயண பிரசாந்த் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

178 விளையாட்டு வீரர்களுக்கு பணிநியமன ஆணை!

ரூ.261 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சர்வதேச விளையாட்டு நகரம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை,பிப்.20-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் (18.2.2026) அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற சாம்பியன்ஸ் ஆப் தமிழ்நாடு - ஐந்தாண்டு கால விளையாட்டுச் சாதனை விழாவில், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் 62 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 178 விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், 1,172 விளையாட்டு வீரர்களுக்கு 33.50 கோடி ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளையும், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு நிதியுதவிகளையும் வழங்கி, சென்னையில் முதற்கட்டமாக 261 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சர்வதேச விளையாட்டு நகரத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் பணி நியமன ஆணைகள் வழங்குதல்

சர்வதேச போட்டிகளான ஒலிம்பிக், ஆசிய போட்டிகள், காமன்வெல்த், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்புகள் நடத்தும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள், தெற்கு ஆசிய விளையாட்டு கூட்டமைப்பு போட்டிகள், பாராலிம்பிக், ஆசிய பாரா போட்டிகள், (மாற்றுத்திறனாளி வீரர்கள் உட்பட) தேசியளவிலான போட்டிகள், ஒலிம்பிக், ஆசிய போட்டிகள், காமென்வெல்த் போட்டிகளின் பட்டியலில் உள்ள விளையாட்டுகளில் தேசிய விளையாட்டு கூட்டமைப்புகள் நடத்தும் தேசிய சீனியர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்கள் நடத்தும் மாநில சீனியர் சாம்பியன்ஷிப் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் 2024 25ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், துணை முதலமைச்சர் அவர்கள் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ், நடப்பாண்டில் 100 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடங்களில் அவர்களது சாதனைகள் மற்றும் கல்வித்தகுதியின் அடிப்படையில் பணி ஆணை வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி, முதற்கட்டமாக, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 84 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பள்ளிக்கல்வித் துறை, தொழில் துறை, எரிசக்தித் துறை, கூட்டுறவுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற 14 அரசுத் துறைகளில் இளநிலை உதவியாளர், உதவியாளர், இளநிலை வரைவு அலுவலர், கூட்டுறவு சங்கங்களில் இளநிலை மற்றும் முதுநிலை ஆய்வாளர் போன்ற பல்வேறு பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை 23.12.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தில் இதுவரை 5 மாற்றுத்திறனாளி (பாரா) விளையாட்டு வீரர்கள் உட்பட 116 விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கான

3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் 62 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 178 விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிவதற்கான பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்.

விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல்

பன்னாட்டு, ஆசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள் மற்றும் பல்வேறு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் இதுவரை சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 5,406 விளையாட்டு வீரர்வீராங்கனைகளுக்கு 177.80 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக, தமிழ்நாட்டில் மற்ற விளையாட்டு வீரர்களுக்கு இணையாக மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் இதுவரை 241 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 29.67 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பன்னாட்டு, ஆசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள், அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி மற்றும் பல்வேறு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 1,172 வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு 33 கோடியே 51 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்கான உயரிய ஊக்கத்தொகையை வழங்கினார்.

சர்வதேச விளையாட்டு நகரத்திற்கு அடிக்கல் நாட்டுதல்

சென்னை, பழைய மகாபலிபுரம் சாலை (OMR), செம்மஞ்சேரி பகுதியில் தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) மூலம் "சர்வதேச விளையாட்டு நகரம்" எனும் பன்முக விளையாட்டு உட்கட்டமைப்பு திட்டம் உருவாக்கப்படுகிறது. இத்திட்டம் மொத்தம் 261 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் 80 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவில், சர்வதேச தரம் வாய்ந்த கால்பந்து மைதானம், துப்பாக்கி சுடும் தளங்கள் (10மீ, 25மீ, 50மீ), வில்வித்தை தளம், ரோயிங், கேனோயிங் மற்றும் கயாக்கிங் போன்ற நீர்விளையாட்டு வசதிகள், BMX சைக்கிள் மற்றும் ஸ்கேட்டிங் மையங்கள், பல்துறை உள்அரங்குகள் (பாட்மிண்டன், மல்யுத்தம், ஸ்குவாஷ், டேபிள் டென்னிஸ் உள்ளிட்டவை), பயிற்சி மையங்கள் மற்றும் வீரர்களுக்கான விடுதிகள் ஆகியவை உருவாக்கப்பட உள்ளன.

OMR பகுதியின் தாழ்வுநில தன்மையை கருத்தில் கொண்டு, நீர்நிலைகள் ஒருங்கிணைப்பு மற்றும் வெள்ளத் தடுப்பு வடிவமைப்புகள் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் சென்னை நகரத்தை சர்வதேச விளையாட்டு மையமாக மாற்றி, ஒலிம்பிக் நிலை வீரர் பயிற்சியை ஊக்குவிப்பதோடு, விளையாட்டு சுற்றுலா மற்றும் சர்வதேச போட்டிகளை நடத்தும் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

முதல் கட்டமாக 261 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சர்வதேச விளையாட்டு நகரத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation)

அரசுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையே தடையற்ற ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும், விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்களை மேம்படுத்துவதில் தொழில்நுட்ப நிறுவனங்கள் முனைப்புடன் செயல்படவும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்' என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டு 8.05.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை சிறப்பாக இயங்க நிதி ஆதாரம் என்பது மிக அவசியமான ஒன்றாகும். எனவே, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், உயர்நிலைப் போட்டிகளில் பங்கேற்றல் மற்றும் பல்வேறு செலவினங்களுக்கு இதுவரையில் 4231 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 30 கோடியே 20 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.01.2026 முதல் 06.02.2026 வரை தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக்கோப்பை போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியில் இடம்பெற்ற தமிழ்நாடு வீரர்கள் தீபேஷ் தேவேந்திரன் மற்றும் ஆர். எஸ். அம்பரீஷ் ஆகியோருக்கு உயரிய ஊக்க தொகையாக தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வீரர்களுக்கான 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கால்பந்து மற்றும் ஹாக்கி விளையாட்டு உபகரணங்களை நாமக்கல் கால்பந்து வீராங்கனை மதுமிதா அவர்களிடம் வழங்கினார்.

இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பரந்தாமன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டுள்ள பாரா பேட்மிட்டன் விளையாட்டு வீரர் ஜெகதீஷ் டில்லி, ஜிம்னாசிஸ்டிக் வீராங்கனை சினேகா, கபடி வீரர் மணத்தி கணேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக அம்பத்தூர் தெற்கு பகுதி சார்பில் மனிதநேயம் – 5 சகலமும் போற்றும் சரித்திரம்! தலைமையின் முதன்மை நிரந்தரம்! எனும் தலைப்பில் பகுதி கழகச் செயலாளர் D.S.P.ராஜகோபால், எம்.சி, தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் திரைப்பட இயக்குனர் நடிகர் கரு.பழனியப்பன், மூத்த பத்திரிகையாளர் மதுக்கூர் இராமலிங்கம், முனைவர் மற்றும் பட்டிமன்ற பேச்சாளர் ம.எழிலரசி ஆகியோர் உரையாற்றினர். மேலும் இக்கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், பி.கே.மூர்த்தி எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ்,சன். பி.முனியாண்டி வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, எல்.பி.எப்.மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜெ.பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி. த. பிரகாஷ் குமார் மற்றும் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கடந்த 5 ஆண்டுகளில் துணை சுகாதார நிலையங்களுக்கு

893 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன!

சட்டப் பேரவையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை,பிப்.20-

இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு 9,355 துணை சுகாதார நிலையங்கள் செயல்பாட்டில் இருக்கின்றது. கடந்த 5 ஆண்டுகளில் 893 புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 680 துணை சுகாதார நிலையங்களில் கட்டிடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் ள் சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

இதுகுறித்து பேரவையில் விவாதம் வருமாறு:

செய்யூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தில் பெரியகயப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் நெற்குணம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இச்சுகாதார நிலையத்தைப் பொறுத்த வரை, வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, இங்கே ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு சர்வே எண் 59ல் 10 சென்ட் இடம் கிராம நத்தத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்நிலத்தினை இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள நில ஆணை மென்பொருளில் பதிவேற்றம் செய்ய உரிய படிவத்துடன் அனுப்பப்பட்டிருக்கிறது. பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு நெற்குணம் துணை சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தக் கேள்விக்கான பதிலை தொடக்கத்திலேயே சொல்லியிருக்கிறோம். கட்டடம் கட்டுவதற்கு 10 சென்ட் நிலம் தற்போது அடையாளம் காணப்பட்டு மிக விரைவில் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கிறது. இன்னொன்று கிராம சுகாதார செவிலியர் காலிப்பணியிடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். கிராம சுகாதார செவிலியர் காலிப்பணியிடத்தைப் பொறுத்தவரை, உச்சநீதிமன்றத்திலிருந்த வழக்குகளை எல்லாம் சரிசெய்து, கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக 2,642 பேரும், கடந்த நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னால் தமிழ்நாடு முதலமைச்சர் ளின் வாயிலாக 3,000 பேரும் பணியில் அமர்த்தப்பட்டு, ஒரு கிராம சுகாதார செவிலியர் காலிப்பணியிடம் கூட இல்லை என்கின்ற நிலை, தமிழ்நாட்டின் மருத்துவத் துறை வரலாற்றில் முதன் முறையாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ளுக்கு கவுன்சிலிங் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஓரிரு நாட்களில் அந்தப் பணியிடங்களும் நிரப்பப்படும்.

மன்ற உறுப்பினர் ள் பல்வேறு மருத்துவமனைகளை சுட்டிக்காட்டி, செவிலியர் பணியிடங்கள் இல்லை, ஆய்வக நுட்புநர்கள் பணியிடங்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார். நிச்சயம் அதற்கான வாய்ப்பு 100 சதவிகிதம் குறைவு. இருந்தாலும் உடனடியாக இன்றைக்கு மாவட்ட சுகாதார அலுவலரை அனுப்பி, அவர் கூறிய அனைத்து மருத்துவமனைகளிலும் இருக்கிற காலிப்பணியிடங்கள் குறித்தான தகவல்களை நாளையே கேட்டுப் பெற்று, அவரிடத்தில் தருவதற்கு தயாராக இருக்கிறேன். இன்னொன்று, நெற்குணம் துணை சுகாதார நிலையத்திலிருந்து ஒரு 12 கிலோ மீட்டர் தொலைவில், பெரிய கயப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையமும், 13 கிலோ மீட்டர் தொலைவில் அச்சரப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர் ள் இன்னொன்றையும் கேட்டார்கள், தமிழ்நாட்டில் எத்தனை புதிய துணை சுகாதார நிலையங்கள் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற துணை சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 8,713. தமிழ்நாடு முதலமைச்சர் ளின் வழிகாட்டுதலைப் பெற்று, கடந்த 1ம் தேதியன்று, 642 புதிய துணை சுகாதார நிலையங்களை நானும், நம்முடைய அயலக அமைச்சர் நாசர் ளும் திறந்து வைத்திருக்கிறோம். ஒட்டு மொத்தமாக இன்றைக்கு தமிழ்நாட்டில் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, 9,355 துணை சுகாதார நிலையங்கள் செயல்பாட்டில் இருக்கிறது. இதில் 6,498 துணை சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டிடங்களிலும், 1214 துணை சுகாதார நிலையங்கள் வாடகை கட்டிடங்களிலும், 1643 வாடகையில்லா கட்டிடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் ளுடைய வழிகாட்டுதலோடு இந்த 5 ஆண்டுகளில் மட்டுமே 893 இடங்களில் புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது கூட 680 கட்டடங்களில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் அந்தப் பணிகள் முடிக்கப்படவிருக்கின்றன.

மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

மதுராந்தகம் தொகு, அச்சரப்பாக்கம் ஒன்றியம், ஓரத்தி மற்றும் வேலாமூர் ஊராட்சியில் இராமாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான சுற்றுச்சுவர் அமைப்பதற்கு எதிர்வரும் நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

கம்பம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ள் தெரிவித்திருப்பதைப் போல, அந்த மருத்துவமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் ளின் வழிகாட்டுதலோடு, ஏற்கெனவே ரூ.10 கோடிக்கும் மேலான புதிய கட்டட கட்டமைப்புகள் கட்டப்பட்டு, தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயம் இந்த விபத்துகள் குறித்தான தனிப் பிரிவு ஒன்று தொடங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

பொதுவாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு மருத்துவர் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏராளமாக இருக்கின்றன. இரவு நேரங்களில் ள் பணியில் இருக்க மாட்டார்கள். On call duty doctors என்கின்ற வகையில்தான், ள் அழைக்கப்படும்போது வருவார்கள் என்றாலும், மன்ற உறுப்பினர் ள் கூறியதைப்போல நெய்வேலி தொழிலாளர்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, ஒரு சில நாட்களில் 1,100 புதிய மருத்துவர்களை நியமிப்பதற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் ள் உத்தரவிட்டு, MRB தேர்வெல்லாம் முடிந்து, இப்போது certificate verification, communual rotation பணியானை வழங்கப்பட்டவுடன், கூடுதல் மருத்துவர்கள் பணியிடங்களை உருவாக்கும்போது, மன்ற உறுப்பினர் ள் கூறிய மருத்துவமனைக்கு பணியிடங்கள் உருவாக்கித் தரப்படும்.

பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

மன்ற உறுப்பினர் ள் தெரிவித்திருப்பதைப்போல, தற்போதுதான் முதலமைச்சர் ளால் ரூ.5 கோடி நிதியாதாரத்துடன் புதிய கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. உடனடியாக 120 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்துவது என்பதெல்லாம் சாத்தியமில்லாத ஒன்று என்றாலும்கூட, பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் உரையாற்றினார்.

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில்

கழிவுநீர்க் குழாய்களை நவீன காலத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படுமா?

சட்டப் பேரவையில் – விருகம்பாக்கம் ஏ.எம்.வி.பிரபாகரராஜா கேள்வி!

சென்னை,பிப்.20-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது விருகம்பாக்கம் தொகுதி ஏ.எம்.வி. பிரபாகர ராஜா கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு:

ஏ.எம்.வி. பிரபாகரராஜா: விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் அமைச்சர் அவர்கள் கழிவு நீருக்கு எம்.ஜி.ஆர். நகர், அண்ணா மெயின்ரோடு, சூளைப்பள்ளம், காணல் நகர், கலைஞர் நகர், சாலிகிராமம் பகுதிகளில் புதிய குழாய்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 129 வார்டு, சாலிக்கிராமம் பகுதியில் இதுவரையில் ஒரு pumping station கூட இல்லை. ஏற்கெனவே, அமைச்சர் அவர்கள் செய்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதையும், எனது தொகுதியில், ஏறக்குறை 40 ஆண்டுகளுக்கு முன்பாக கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டன, அதனால் அடிக்கடி drainage overflow நடைபெறுவதால் 40 ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்ட கழிவுநீர்க் குழாய்களை நவீன காலத்திற்கேற்ப 6 வார்டுகளிலும் மாற்றி, அதிகமான pumping station அமைத்து தருவார்களா என்பதையும், முன்பு இந்தஇடத்திற்கு ஜனத்தொகை கிடையாது, இப்போது 3 இலட்சம் மக்கள் வசிக்கக்கூடிய இடமாக உள்ளதாலும் அமைச்சர் அவர்கள் புதிய கழிவுநீர்க் குழாய்களை அமைத்துத் தருவார்களா?

அமைச்சர் கே.என். நேரு: விருகம்பாக்கம் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டது, ஏற்கெனவே, விருகம்பாக்கம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சாலைகளில் கிட்டத்தட்ட ஏழு, எட்டு ஆண்டு காலங்களாக தண்ணீர் வழிந்தோடி, சாலையில் நடக்கவே முடியாமல் இருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்களால்தான் அண்ணா சாலையிலிருந்து செல்கின்ற குழாய்களை புது குழாய்களாக மாற்றி, அங்கு தண்ணீர் தேங்காமல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், Metro Water அதிகமாக இருக்கின்ற இடங்களான விருகம்பாக்கம் பகுதி, நெசப்பாக்கம் பகுதிகளில்தான் அனைத்து பணிகளும் நடைபெறுகின்

எனவே, இப்போது பார்த்தீர்களென்றால், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் வடசென்னையில் இருக்கிற அனைத்து கழிவுநீர்க் குழாய்களையும் மாற்றி புதிதாக அமைத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது விருகம்பாக்கம் பகுதியிலே ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. நெசப்பாக்கம் பகுதியிலும் புதிதாக செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர் எந்தப் பகுதி என்று எடுத்துச் சொன்னால், நிச்சயமாக அந்தப் பகுதியை எடுத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.